மதுரை யமகவந்தாதி யுரை - முதுகுளத்தூர் பீ.ஆறுமுகப் பிள்ளை

மதுரை யமகவந்தாதி யுரை -1

மாதங்கத் தாமரை வாவிகள் சூழு மதுரைநகர்

மாதங்கத் தான்புக ழந்தாதி கூற வருந்துணையாய்

மாதங்கத் தார்ந்த பயோதர வல்லபை வாமமுற்ற

மாதங்கத் தானனச் சித்திவி நாயகன் வண்கழலே

இலக்குமிதேவி வாசஞ்செய்கின்ற செந்தாமரைகள் நிறையப்பெற்ற தடாகங்கள் சூழ்ந்திருக்கின்ற,மதுரைமாநகரத்தி லெழுந்தருளியிருக்கின்ற உமாதேவியாரை இடப்பாகத்திலே வைத்தருளிய சோமசுந்தரபெருமான் கீர்த்தியை அந்தாதியாகச் சொல்வதற்கு,மேன்மையுள்ள பொன்னைப் பொருந்தி விளங்குகின்ற ஸ்தனபாரங்களையுடைய,வல்லபையென்னுந் திருத்தேவியார் தன்பக்கத்தே சேர்ந்திருக்கப்பெற்ற யானை முகமுள்ள சித்தி விநாக்கடவுளுடைய சிறப்புப்பொருந்திய திருவடிகளே சகாயமாக வரும்.

பழ.முத்துராமலிங்கம் - ஈகரை தமிழ் களஞ்சியம்

மதுரை யமகவந்தாதி யுரை **-2**

திருக்கையி லாயத் திருந்தெழிற் கூடலிற் சென்றுமையார்

திருக்கையி லாளை மணந்தா னருட்புணை சேர்ந்துதத்தந்

திருக்கையி லாமற் றொலையாரைக் கூற்றுவன் செக்கிலிட்டுத்

திருக்கையி லார்வந்து மீட்பா ரவன்கழல் சேர்மின்களே

தெய்வத்தன்மையுடைய கைலாசமலையினின்று அழகு பொருந்திய மதுரையை யடைந்து, வேல்போன்ற மையணிந்த கண்களையுடைய தடாதகைப்பிராட்டியாரை திருமணமுடித்த சிவபெருமானுடைய வருட்கலத்தையடைந்து, தங்கள் தங்களுடைய குற்றங்களைப் பற்றறப் போக்கடியார்களை, இயமனானவன் வலிமையாகிய செக்கிற்புகுத்தி யாட்டும்போது யாவர்வந்து விலக்குதல் செய்வார்?இல்லையாகலின், அந்தச்சிவபெருமானுடைய திவ்விய சரணாரவிந்தத்தைச் சேர்ந்துய்யுங்கள்.

மதுரை யமகவந்தாதி யுரை **-3**

களங்கனந் தாவளை கஞ்சனை யேய்க்குங் கௌரிபங்கன்

களங்கனந் தாது புனைந்தானென் னுள்ளங் கவர்ந்திடுமே

களங்கனந் தாவர வென்றான் மதுரையிற் கண்ணுதனங்

களங்கனந் தாமரைத் தாளே நமக்குக் கதியிடமே

கண்டமும் கபோலமும் வலிமையுள்ள சங்குக்கும் கண்ணாடிக்கும் பொருந்துகின்ற உமாதேவியாரை வாமபாகத்திலே வைத்தவரும், சந்திரனைத் துன்பத்தினின்று நீக்கி யெடுத்துத் தன்சடாமுடியில் வைத்தவரும், அடியேனுடைய ஹிருதயத்தைக் கவர்ந்து கொண்ட குற்றமில்லாதவரும், (திருநாளைப் போவாரை நோக்கி) நந்தாவருவாயாக வென்றழைத்தவரும், மதுரையிலெழுந்தருளிய நெற்றிக் கண்ணையுடையவரும் நம்முடைய சரீரமானவருமாகிய சிவ பெருமானுடைய அழகிய தாமரைமலர் போன்ற திருவடிகளே நமக்கு மோக்ஷஸ்தானமாகும்.

மதுரை யமகவந்தாதி யுரை **-4**

கதம்பந்தந் தாவர மாக்கொளும் வானைக் கடக்குமெழிற்

கதம்பந்தந் தாவளக் கானத்தை யூரெனக் கண்டுயர்பா

கதம்பந்தந் தாமம் பெறவைத்த கூடற் கயற்கணிபா

கதம்பந்தந் தாண்மறை தேடுமுன் பாதத்தைப் கண்டிடவே

ஆகாயத்தை யூடுருவுங் கடப்பமரங்கள் தமதுஇடமாகக் கொண்டதும், அழகிய மேகங்கள்போன்ற யானைக்கூட்டங்கணிறைந்ததுமான வனத்தை, நகரமாகவுண்டாக்கி மகிமையுள்ள எல்லாநாட்டு மேலோர் மொழிகளையும் முறைமைகளையும் அழகு பெறவமைத்த மதுரைமாநகரில் எழுந்தருளிய மீன்போலுங் கண்களையுடைய உமாதேவியாருக்கு நாயகரே!, சுருதிகள் தேடுகின்ற உம்முடைய சரணாரவிந்தத்தைத் தரிசித்தென்னை யொப்புக் கொடுக்கப் பற்றுக் கோடுதந்து இரக்ஷிப்பீராக.

மதுரை யமகவந்தாதி யுரை **-5**

கண்டனந் தந்தங் கயனாக முத்தங் கருங்குழற்கற்

கண்டனந் தந்த மொழிநடை நூண்ணிடைக் கன்னிகறைக்

கண்டனந் தந்தனை வானெயிற் கூடற் கடிநகரிற்

கண்டனந் தந்தரம் போற்றியென் றுன்பங் கடந்தனனே

திருக்கண்களும் ஸ்தனபாரங்களும் பற்களும்,(முறையே) மச்சத்துக்கும் மலைக்கும் முத்துக்கும் உவமையாக உள்ளவளும், கரியகூந்தலை உடையவளும், கற்கண்டுக்கும் அன்னத்துக்கும் நூலுக்கும் உவமை காட்டுகின்ற அழகிய சொற்களை நடையையும், நுண்மையான மருங்குலை உடையவளுமாகிய, மீனாம்பிகையின் தேஜஸையும், விஷந்தங்கிய திருக்கண்டத்தையுடைய சிவபெருமான் அழகையும், விண்ணளாவிய மதிள் சூழ்ந்த மதுரை என்னுங் காவல் நிறைந்த நகரத்திற் றெரிசித்து, அனேகந்தரம் வணங்கி அடியேன் துன்பத்தினின்றும் நீங்கினேன்.

பழ.முத்துராமலிங்கம் - ஈகரை தமிழ் களஞ்சியம்

மதுரை யமகவந்தாதி யுரை -6

தனக்கடங் காட்டித் தனமீட்டி வஞ்சந் தழுவியக்க
தனக்கடங் காதுவர் சொற்கேட்டு வாழ்த றவிர்த்தயனார்
தனக்கடங் காவளர் சோதியைச் சார்மினைந் தாருநிகர்த்
தனக்கடங் காநிறை கூடற் றலத்தினிற் றானடைந்தே

குடம்போலு முலைகளைத் தெரியும்படி காண்பிவித்துப் பொருளை சம்பாதித்து, வஞ்சகத்தையும் அந்தக் கொலையையும் ஆதரித்து நீதியைக் கொல்லுகின்ற மாதர்களுடைய, வார்த்தையைக் கேட்டு வாழும் வாழ்க்கையைத் தொலைத்து, அழகிய கற்பகதருவுக்கொப்பான ஆகாயத்தையளாவிய சோலைகணெருங்கிய மதுரையென்னும் திவ்விய க்ஷேத்திரத்தைச் சேர்ந்து, பிரமாவுக்கு அடங்காமல் அக்கினிப் பிழம்பாகி நின்ற சிவபெருமானை அடைக்கலம் புகுதுங்கள்.

மதுரை யமகவந்தாதி யுரை -7

தானந் தவம்பல செய்துமென்னா மறை சாற்றியநி
தானந் தவறின்றிக் கூடற் றலத்திலென் றாயுடனே
தானந் தவம்பலத் தாடிய சோதியைச் சார்ந்துமன
தானந் தவல்வினை தீர்ப்பவ ரேமுத்தி தங்குவரே

மதுரையென்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எனது மாதாவாகிய உமாதேவியாருடன் தானும் அழகுள்ள வெள்ளியம்பலத்திற் றிருநடனஞ் செய்தருளிய சிவபெருமானை, சுருதிகளிற் சொல்லியபடி (நிக்ஷயமாய்) குற்றகணீங்கி யடைந்து, வலிமையாகிய வினைகளை மனதாரக் கெடும்படி தீர்ப்பவர்கள் மோக்ஷஸாதன மடைவர், (பிறர்மதிக்கும்படி) தருமங்களையும் தவங்களையும் பலவாறாகச் செய்வதினால் யாது பிரயோஜனம்.

மதுரை யமகவந்தாதி யுரை -8

தங்கத் தனத்தங் கயற்கண்ணி பாகனந் தாமரைமேற்

தங்கத் தனத்த னறியான் மதுரைத் தலத்தினுளார்

தங்கத் தனத்தந் தலையா னுருவந் தவளத்துமா

தங்கத் தனத்தந் தவிர்த்தான் பதங்கதி தந்திடுமே.

தேமற்படர்ந்த ஸ்தனபாரங்களையும் அழகிய மீன் போன்ற விழிகளையுடைய உமாதேவியாரை வாம பாகத்திலே வைத்தவரும்,அழகிய தாமரைப்புஷ்பத்தின் மேல் வீற்றிருக்கின்ற பிரமாவும் விஷ்ணுவும் காணக்கூடாதவரும், மதுரை ஸ்தலத்தில் வசிப்பவர்களுக்குக் கர்த்தாவும், கையிலே பிரம கபாலத்தை வைத்திருப்பவரும், வெள்ளை நிறமுள்ள யானையினுடைய சாபத்தைத் தீர்த்தவருமாகிய சிவபெருமானது, திவ்வியசரணாரவிந்தம் மோக்ஷத்தைக் கொடுத்தருளும். (ஆதலின் மனமே, அத்திருவடியை விரும்புவாயாக).

மதுரை யமகவந்தாதி யுரை -9

தந்தனத் தானத்த மால்காட்டுந் தையலர் சற்சிதமி

தந்தனத் தானத்த னாதிய ரின்பிற் றயங்கமயல்

தந்தனத் தானத்த நின்னடிப் போதிணை தாதனத்த

தந்தனத் தானத்த வென்றாடுங் கூடலிற் சங்கரனே

தங்கள் மார்பகங்களால் (யாவரும்) இச்சிக்கும்படி மயக்குகின்ற மாதர்களது விருப்பம் நிறைந்து,பிரமா விஷ்ணு முதலிய தேவர்கள் காமத்திலழுந்துபடி மயக்கத்தைக் கொடுத்த மன்மதனுடைய மைத்துனராகிய முருக்ககடவுளுக்குப் பிதாவே, தனத்த தந்தனத் தானத்த

வென்னுந் தாளத்துடன் மதுரையில் நிர்த்தனஞ் செய்தருளிய சிவபிரானே, உம்முடைய உபயபாதாரவிந்தங்களையும் அடியேனுக்குச் கொடுத்தருள வேண்டும்.

மதுரை யமகவந்தாதி யுரை -10

சங்கந் தரங்கத் தமுதங் கடைந்திடச் சார்ந்தெழுநஞ்
சங்கந் தரங்கத் தகூடற் றலத்திற் றருக்கடைந்த
சங்கந் தரங்கத் தவஞ்சலென் றாண்டரு டற்பரனே
சங்கந் தரங்கத் தனாக்குவ நின்னடி தந்தருளே

சங்குகள் நிறைந்த திருப்பாற்கடலை யடைந்து (தேவர்களுக்காக) அமுதங் கடைந்திடும் பொழுது எழுந்து வந்த விஷத்தைத் திருக்கண்டத்தி லடக்கியருளிய கர்த்தரே, மதுரையிற் (கல்வியால்) அபயாஸ்தங் கொடுத்துக் காப்பாற்றிய ஆன்மாக்களிடத்திற் பிரியமுள்ள கடவுளே, அன்புள்ள குமாரராகிய முருகக்கடவுளை கைலாயத்திலே(பிரணவத்தைத் சொல்லாயாகவென்று) குருஸ்தானத்தில் வைத்து கேட்டவரே, உம்முடைய பாதாரவிந்த தெரிசனை அடியேனுக்குச் கொடுத்தருள்வீராக.

பழ.முத்துராமலிங்கம் - ஈகரை தமிழ் களஞ்சியம்

மதுரை யமகவந்தாதி யுரை -11

தந்திக் குவளை யிடைவிழி யார்புடை சாரமயல்
தந்திக் குவளை யனங்கனை மாய்த்தவன் றாண்மலரைத்
தந்திக் குவளை யிடங்கற்செற் றான்முடி தன்னில்வனி
தந்திக் குவளை யணிந்தே மதுரையிற் சாத்தின்னே.

நூலுக்கும் இந்த நீலோற்பலத்துக்கு நிகர்த்த மருங்குலும் கண்களுமுடைய மாதர்களது சேனைகள் பக்கத்திலே நெருங்க மயக்கத்தைக் கொடுத்துக் கருப்புவில்லையும் வளைத்துத் (தன்பேரிற் கணை தொடுத்த) அங்கசனை நெற்றிக் கண்ணால் மாய்த்தவராகிய சிவபெருமானது பாதாரவிந்தங்களை, யானையைக் கொல்லவாரம்பித்த முதலையைச் சங்கரித்த மஹாவிஷ்ணுவானவர், விரைவுடன் நாடோறுங் (தனக்கு) ஆதரவாகிய கங்கணமென்று சென்னியின் மேல் அலங்கரிப்பாய் மதுரையிற் சூட்டிக்கொண்டார்.

மதுரை யமகவந்தாதி யுரை -12

தினந்தா வரத்தை நிலையென நம்பித் திரிந்தலைந்தேந்

தினந்தா வரத்தை தவிர்த்திலங் கூடற் றிருநகரத்

தினந்தா வரத்தை யெடுத்தயின் றான்பணி தேவனைவாழ்த்

தினந்தா வரத்தை யடைந்திடர்க் கேவிடை செப்புவையே

மனமே! நாடோறும் (அநித்தியமான) சரீரத்தை நித்தியமென்று நிக்ஷயித்து மாறுபட்டு அலைவாகிச் சுமந்தோம், வலிமையாகிய துன்பத்தை நீக்கினோமில்லை,அழகிய பூமியை எடுத்தருந்திய மஹாவிஷ்ணு பூசிக்கப்பெற்ற மதுரை மாநகரத்தின் கண்ணெழுந்தருளிய சிவபொருமானை ஸ்தௌத்தியஞ் செய்து, கெடாத வரங்களைப் பெற்று துன்பம் தானாகவே விலகிக் கொள்ளும்படி அதற்கு மறுபொழி சொல்வாயாக.

மதுரை யமகவந்தாதி யுரை -13

வையம் பரவந் திருக்கல்குற் பாவையர் மாட்டுமயல்

வையம் பரவந் திருத்திகொள் வோமிந்த வாரிதிசூழ்

வையம் பரவந் திருவால வாயில் வளர்ந்திடுதே

வையம் பரவந் திருவெந்நெஞ் சத்தென வாழ்த்திடவே

சமுத்திரஞ் சூழ்ந்த இவ்வுலகமெல்லாம், துதிக்கின்ற அழகிய தெய்வீகம் பொருந்திய மதுரையில் எழுந்தருளிய சிவபிரானை, அழகிய பரமசிவனே அடியேங்கள் மனாலயத்தில் வந்திருக்கவேண்டுமென வணங்கப் பெறுவோமானால்- திருத்தி கொள்வோம்,கூர்மை பொருந்திய அம்புக்கும் அரவபடத்துக்கும் நிகர்த்த விழிகளையும் நிதம்பத்தையும் உடைய மாதர்களிடத்து இச்சைகொள்ளோம்,விரியக்கூடிய மனரம்மியத்தை அடைவோம்.

மதுரை யமகவந்தாதி யுரை -14

திடவா ரணத்தங்க மேலா னமணர் சினத்துவிட்ட

திடவா ரணத்தங்கஞ் செற்றான் மதுரையிற் றேவனச்சோ

திடவா ரணத்தங்கந் தாவுந் தனத்துமை செல்வன்றுதித்

திடவா ரணத்தங் கரியறி யானென்றன் சிந்தையனே.

உண்மையான வேதங்களின் அழகிய முடியின் மேலுள்ளவரும், சமணர்களாற் கோபித்துவிடப்பட்ட வலிமை பொருந்திய யானையினுடலைக் கிழித்து மாய்த்தவரும், மதுரையில் எழுந்தருளிய தேவரும்,நன்னிமித்தமாக கச்சுப் பொருந்துகின்றதும் தேமற்பரவுகின்றதுமான மார்புகளையுடைய உமாதேவி யாருக்கு நாயகரும், திருக்கரத்திற் சங்கு இருக்கப் பெற்ற விஷ்ணு வணங்குவதற்கு அரியவரும் ஆகிய சிவபெருமான்,அடியேனுள்ளத்தில் வீற்றிப்பவர்.

மதுரை யமகவந்தாதி யுரை -15

அயனந்தி யேழ்பரி யாதவன் சந்திர னண்டர்பிரான்

அயனந்தி யங்குங் கரன்போற்றுங் கூட லமர்ந்தவெந்தம்

அயனந்தி யானநின் பாதத்திற் சேர வருளியின்னும்

அயனந்தி ரும்ப வராதருள் வாயுன் னடைக்கலமே

நந்திகேஸ்வரரும் சப்தபுரவிகளையுடைய சூரியனும் சந்திரனும் தேவர்களுக்கரசனாகிய இந்திரனும் பிரமாவும் சங்கு பிரகாசிக்கின்ற திருக்கரங்களையுடைய விஷ்ணுவும் பக்கத்திலே நின்று வணங்கப்படுகின்ற மதுரையில் எழுந்தருளிய எங்களுடைய பிதாவாகிய சிவபெருமானே, எங்களுடைய தியானம் உம்முடைய திருவடிகளிற் சேரும்படி கருணை செய்து, பிறவித்துன்பம் இனிமேலும் மாறிமாறி வராமல் அருள் செய்ய வேண்டும் (உங்கள்) உம்முடைய அடைக்கலம்.

மதுரை யமகவந்தாதி யுரை -16

கலக்கந் தரத்தன வார்குழற் பாவையர் காதல்விட்ட
கலக்கந் தரத்தமர் மைவிடத் தாய்செய் கனிவுடன்பு
கலக்கந் தரத்தந் திரமறிந் தாயெனைக் காத்தருள்வாய்
கலக்கந் தரத்தண்டன் சாருமுன் கூடற் கனிபங்கனே.

திருக்கண்டத்திலே அமரும் படி கறுப்பு விஷத்தை வைத்தவரே, முருகக்கடவுள் அந்த பிரணவப்பொருளை அன்புடன் சொல்லக் கேட்டவரே, மதுரையில் எழுந்தருளிய உமாதேவியார் வாழப் பெற்ற வாம பாகத்தையுடையவரே, மலைக்கும் அம்மேகத்துக்கும் நிகர்த்த ஸ்தனங்களையும் நீண்ட கூந்தலையுடைய மாதர்களிடத்துள்ள மயக்கம் என்னை விட்டு நீங்கும்படி செயவீராக, அச்சத்தை கொடுக்கக் கூற்றுவன் வருமுன்னரே அடியேனைக் காப்பாற்றி அருள் செயவீராக.

மதுரை யமகவந்தாதி யுரை -17

பங்க வளைக்குட் கயறூங்குங் கூடற் பசுபதித
பங்க வளைக்கும் புவிக்குமங் காந்தவன் பற்றும்வலப்
பங்க வளைக்குல மாதர்க்கு முன்னம் பரிசளித்தாய்
பங்க வளைக்குந் துயர்தடுத் தாளும் பரமுனக்கே.

சேற்றினிடமாய் சங்குகளுக்குள் மச்சங்கள் நித்திரை செய்கின்ற மதுரையில் எழுந்தருளிய சிவபெருமானே, வெப்பத்தைக் கவர்கின்ற வெண்ணெய்க்கும் பூமிக்கும் வாய் திறந்த விஷ்ணு கைக்கொண்ட வலப்பாகத்தை உடையவரே, (மதுரை மாநகரத்தின்கண்) குலஸ்திரீகளுக்கு முன்னமே வளையல்களை ஈகையாகக் கொடுத்தவரே, பாவஞ் சூழும்படியான துன்பத்தை நீக்கி என்னை ஆட்கொள்ளும் பாரம் உமக்கே.

மதுரை யமகவந்தாதி யுரை -18

பரவை யருந்ததி நேர்வாட்குத் தூது பகர்ந்தவமுன்

பரவை யருந்து மவற்கருள் கூடற் பதியினிற்றா

பரவை யருந்துதி வேற்கைய ரைய பணிபுரியும்

பரவை யருந்தொழுந் தாளடைந் தேனவை பார்த்திருந்தே.

அருந்ததிக் கொப்பான (கற்பு) நிலையள்ள பரவைநாச்சியாரிடம் (சுந்திரமூர்த்தி நாயனார் பொருட்டு) தூது சென்று சொன்னவரே, முன்னொருக்கால் சமுத்திரத்தைப் பானம் பண்ணிய அகஸ்திய மஹாமுனிவருக்கு அருள் செய்த மதுரை ஸ்தலத்தில் நிலையுள்ளவரே, கூர்மை பொருந்தியதும் அரிதானதும் வணங்கப்பெற்றதுமான வேலாயுதத்தைத் திருக்கரத்திலேந்திய முருகக்கடவுளுக்குப் பிதாவே, தொண்டியற்றப்பெறும் தேவசபையார் வணங்குகின்ற உம்முடைய திருவடிகளை அடைந்தேன், அச்சபையார் செய்வதைப் பார்த்திருந்து.

மதுரை யமகவந்தாதி யுரை -19

இரும்பா மனத்தை யடைந்தாலு மென்று மிறைஞ்சியந்த

இரும்பாலு முண்டவன் போற்றிடுங் கூட லெழிற்றலத்தே

இரும்பாவந் தீருமற் றெத்தலத் தேனு மிருக்கிலவை

இரும்பாலை யாய்விடுங் கண்டீர் புவியி லிருப்பவரே

பூமியில் இருப்பவர்களே, (நீங்கள் கடவுளை வணங்காத) இரும்பு போலும் கன்னெஞ்சத்தை உடையராயிருந்தாலும், அழகிய தயிரும் பாலும் அருந்திய விஷ்ணுவானவர் எப்போதும் தாழ்ந்து வணங்கப்பட்ட மதுரையென்னுஞ் சிறப்புள்ள நகரில் வசித்துக் கொண்டிருங்கள், (இ·.தன்றி) மற்றெந்த ஸ்தலத்திலாவ திருந்தாலும் அது பெரிய பாலை நிலைத்ததாய்விடும், அறிமின்கள்.